RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s37

OPEN ACCESS

# காதுகள் புதினம் வெளிப்படுத்தும் மகாலிங்கத்தின் மனச்சிதைவு

**த. கண்ணன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலைப்பட்ட மேற்படிப்பு விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

# Schizophrenia of Mahalingam Expressed in Kathugal Puthinam novel

**D. Kannan** [a, *]

[a] Department of Tamil, Bharathiar University Postgraduate Extension and Research Centre, Perundurai, Erode-638052, Tamil Nadu, India

* Corresponding Author:
drdkanan10671@gmail.com

Received: 16-03-2021
Revised: 23-08-2021
Accepted: 17-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

The psychology of mutation has several stages. The individual changes slightly from his nature and undergoes various stages of mutation. One of them is Schizophrenia. The most serious of mental illnesses is Schizophrenia. Mahalingam was a believer of God. Born in a business family. Suffers from Schizophrenia that is prominent in mutant elements. Mahalingam is afflicted by the dullness of the senses, which has been distinguished among the types of Schizophrenia. Among them, voices arouse within him affects him mentally. He faces innumerable tribulations and tragedies in his family life. Eventually he gets rid of the disease through spiritual practice. This study aims to explain the Schizophrenia of the Mahalingam.

**Keywords:** Kathugal Puthinam Mahalingam, Schizophrenia, Psychology

## முன்னுரை

பிறழ்வு நிலை என்ற உளப்பிணி பல படிநிலைகளைக் கொண்டது. தனிமனிதன் தன் இயல்பிலிருந்து சிறிது சிறதாக மாறிப் பல்வேறு நிலைகளில் பிறழ்வு நிலைக்கு ஆளாகிறான். அவற்றில் ஒன்று மனச்சிதைவு (Schizophrenia) என்பதாகும். மனநோய்களில் மிகவும் தீவிரமானது மனச்சிதைவு ஆகும். 'காதுகள்' புதினத்தின் முதன்மை கதாப்பாத்திரமாக விளங்கும் மகாலிங்கத்தின் மனச்சிதைவைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Schizos - pherons என்ற கிரேக்க லத்தீன் சொற்களின் இணைப்பில்தான் இந்நோய்க்கு இப்பெயர் சூட்டப்பட்டது.

"மனதின் காரணமாக எண்ணங்கள் உருவாகின்றன. அவற்றின் வெளிப்பாடுகளாகச் சொற்களும், செயல்களும் அமைகின்றன. மனிதனின் எண்ணம் செயல் இரண்டையும் சிதைக்கும் தன்மையுடைய இந்நோய் மனச்சிதைவு என்று அழைக்கப்படுகிறது" என்பார் உளவியலாளர் (Rudhran, 2015).

"உண்மையான பொருட்களின் தன்மையை விட்டு விட்டு கற்பனையில் மூழ்குதல், இவற்றின் மூலம் தப்பிக்கச் செயல்படும் பின்னோக்க வினையே மனச்சிதைவு" என்று உளவியலாளர் குறிப்பிடுகிறார் (Carson, 1997).

## மனச்சிதைவிற்குரிய தீவிர அறிகுறிகள்

1) பிறழ் நம்பிக்கைகள்
2) புலன்களின் பேதலிப்புகள்
3) பேச்சில் தெளிவும் கோர்வையும் இல்லாமை
4) வித்தியாசமான விபரீத நடவடிக்கைகள்
5) உணர்வுகளை வெளிப்படுத்த இயலாமை
6) சமூக பங்கேற்பின் பின்னடைவு

போன்றவை இந்நோய்க்குரிய அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன. 'காதுகள்'புதினத்தில் இடம் பெறும் மகாலிங்கம் மனச்சிதைவு நோயின் ஒரு கூறான புலன்களின் பேதலிப்பால் (Hallucinations) பாதிக்கப்படுகிறான்.

## புலன்களின் பேதலிப்புகள் (Hallucinations)

மனச்சிதைவு நோயின் முக்கியக் காரணியாக இவை விளங்குகிறது. காதில் குரல்கள் ஒலிப்பதுதான் இதன் முக்கிய அறிகுறியாகும். யாரும் இல்லாத இடங்களில் அவர்கள் காதுகளில் வேறு ஒருவர் பேசுவது போல் கேட்கும். இந்தக் குரல்களின் கட்டளைக்கேற்ப பாதிக்கப்பட்ட நபர் முடிவெடுத்து கூறுவதும் உண்டு. சிலர், ஒலிக்கும் அக்குரல்களுக்குப் பதில் கூறாமல் மௌனமாக கேட்டுக்கொண்டிருப்பர். அப்போது அவர்கள் பார்வையில் வெறுமை, கவனக் குறைவு காணப்படும்.

## உளவியலாளர்கள் புலன்களின் பேதலிப்பை

1) கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Auditory Hallucinations)
2) பார்வை தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Visual Hallucinations)
3) மோப்பம் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Offactory Hallucinations)
4) தொடுதல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Tactual Hallucinations)

என நான்கு வகையாகப் பிரித்துள்ளனர்.

### 1) கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Auditory Hallucinations)

உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் இவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. உளவியலாளர்கள் இவற்றின் வகைகளை,

அ. தொடக்க நிலையிலுள்ள கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Elementry Auditory Hallucinations)

ஆ. தீவிர நிலையிலுள்ள கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Audiable Thoughts Hallucinations)

என இருவகைப்படுத்தினர்.

அ. தொடக்க நிலையிலுள்ள கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Elementry Auditory Hallucinations)

உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் சப்தங்களை மட்டுமே ஒலிப்பது. வெறும் ஓசைகளை அடிப்படையாக வைத்து இப்புலன்களின் பேதலிப்புக்கள் அமைகின்றன.

ஆ. தீவிர நிலையிலுள்ள கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Audiable Thoughts Hallucinations)

உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் பாதிக்கப்பட்டவரை நோக்கி கட்டளையிடல், பாராட்டுதல், கவனத்தைச் சீர்குலைத்தல், குடும்பத்தை அழித்து விடுவதாக மிரட்டல். பாதிக்கப்பட்ட நபரின் செயலை குரல்கள் விமர்சித்தல் போன்ற நிலைகளில் அமைகின்றன.

### 2) பார்வை தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Visual Hallucinations)

1. கடவுளை தான் நேரில் காண்பதாக தோன்றும் புலன்களின் பேதலிப்புகள்
2. நரகத்திலுள்ள நிலைப்பாடுகள், சொர்க்கம், நெருப்பு, காற்று போன்றவற்றை தான் நேரில் காணும் நிலையிலான புலன்களின் பேதலிப்புகள்.
3. மோப்பம் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள் (Offactory Hallucinations)
4. தன்னைச் சுற்றி கெட்ட வாசனைகள் சூழ்ந்து இருப்பதாக உணரும் புலன்களின் பேதலிப்புக்கள்.
5. தொடு உணர்வு சம்பந்தமான புலன்களின் பேதலிப்புகள் (Tactual Hallucinations)

பூச்சிகள், நத்தைகள், புழுக்கள் போன்ற உயிரினங்கள் சிங்கம், புலி போன்ற விலங்கினங்கள் தம் மீது ஊர்வதாகத் தோன்றுவது.

## காதுகள் புதினம் - கதைச் சுருக்கம்

ஆன்மீக நெறி சார்ந்த ஒரு வசதியான வணிகக் குடும்பத்தில் பிறந்தவன் மகாலிங்கம். திருமணமாகி வசதியாக வாழ்ந்து வந்தான். பிறகு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் குடும்பத்தில் வறுமை சூழ்ந்தது. வறுமை மகாலிங்கத்தின் குடும்பத்தை வாட்டுகிறது. பல சோதனைகளையும் வேதனைகளையும் தொடர்ச்சியாக மகாலிங்கம் சந்திக்கிறான். மகாலிங்கத்திற்கு காதுகள் அவனோடு பேசுவதாக உணர்கிறான். தொடர்ந்து நேரும் இந்த அவலம் பல்வேறு நிலைபாடுகளில் தொடர்கிறது. ஒரு சூழலில் மகாலிங்கத்தை மனநோயாளியாக மாற்றுகிறது. அச்சூழலிருந்து விடுபட பல்வேறு மனப்போராட்டங்களை மகாலிங்கம் எதிர் கொள்கிறான். இறுதியில் ஆன்மீகத்தின் மூலமான அறநெறி அவனைக் காப்பாற்றுகிறது.

## காதுகள் புதினத்தில் தொடக்கநிலை கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகள்

“ஒரு நல்ல நாளாய் பார்த்து இடதுகாது விசிலடிப்பது போல ஒய்ய்ங் என்று சப்தம் எழுப்பியது. சில நிமிடங்களில் வலது காது அதன் எதிரொலி குடுத்தது. நாடகக் கொட்டகையில் தரைக்காரர்கள் விசிலடிப்பது போல் இரண்டு செவிகளும் போட்டி போட்டுக்கொண்டு ஒய்வு இல்லாமல் சப்தம் எழுத்தியம்பு இருந்தன” (Venkataraman, 2019).

மகாலிங்கம் காதுகள் செவிபடுத்தன்மை அடைந்தன என நினைத்துக் கொண்டான். பல வைத்தியங்கள் செய்தும் அவனது நோய் குணமாகவில்லை. இறுதியில்,

“பம்பம் என சங்கு ஊதுவது போலவும், டங்டங் என கோவில் மணி முழங்குவது போலவும், ள்ஹோஹ் என அலைகள் ஓலமிடுவது போலவும், பூஜை மணி ஒலிப்பது போலவும் சத்தங்களின் பல சாயல்களை ஒலிகள் காட்டின” (Venkataraman, 2019).

என ஒலிகள் சப்தமிடும் தன்மையை மகாலிங்கம் பாத்திரம் மூலம் ஆசிரியர் உணர்த்துகிறார். இவை மனச் சிதைவு நோய்க்குரிய தொடக்க நிலை அறிகுறியாகும்.

“படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். நாள் முழுவதும் கடுமையான வெயில், புழுக்கமாக இருந்தது. எதிர்ப்பார்த்தபடி மழை பெய்யும் சப்தம் கேட்டது. ஆகாயம் முழுவதும் கேட்டது. மழை பெய்தது. டமால் என்று பிளக்கும் இடிமுழக்கம் வெகு அருகில் கேட்க எழுந்து உட்கார்ந்தான் மகாலிங்கம். மழை பெய்யும் அறிகுறியே இல்லை. ஆகாயம் கோரப் பற்களைப் பார்த்து சிரித்தது” (Venkataraman, 2019). இவ்வாறு தொடக்க நிலை புலன்களின் பேதலிப்புக்களை ஒட்டி மகாலிங்கம் பாத்திரப்படைப்பு அமைகிறது.

## தீவிர நிலையிலுள்ள புலன்களின் பேதலிப்புகள்

தீவிர நிலையில் உள்ள கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்பில் முக்கியப் பகுதி கட்டளை இடுதலாகும்.

உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் பாதிக்கப்பட்ட நபரிடம் கட்டளை இடுவதாக அமைவது இதன் முக்கியக் கூறாகும்.

காதுகள் புதினத்தில் மகாலிங்கத்திற்குள் உள் ஒலிக்கும் குரல்கள் அவன் செயலை விமர்சிப்பதாக அமைகின்றன. வியாபாரத்தில் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பார்ப்பதற்கு கணக்குப் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான் மகாலிங்கம். அப்போது,

"டேய் கணக்குப் புத்தகத்திலே காசு காய்க்குதான்னு பார்க்குறியாடா அது மரத்துப் போச்சு. இனிமே அது குட்டி போடாது. உன் தர்பாரும் முடிஞ்சு போச்சு. நீ உன் பெஞ்சாதி, உன் கொளந்தைகள் எல்லாம் கையில் தப்பரையோட தெருவில் கோவிந்தா கோவிந்தா போட்டுக்கிட்டே போகத்தான் அடுத்த சீன். அதப் பார்த்து நான் சிரிப்பாச் சிரிக்கப் போகிறேன்" (Venkataraman, 2019).

இவ்வாறு எழும் புலன்களின் பேதலிப்புக்கள் மகாலிங்கத்தின் செயலை விமர்சிப்பதாய் அமைகின்றன. தமக்கு ஏற்பட்ட தொல்லையிலிருந்து விடுபட துறவி ராமதாசை சந்திக்கச் செல்கிறான். அப்போது,

"யாருடா அந்த ராமதாசு? பெரிய ரவுடியா? நம்பளையெல்லாம் அடிக்க மிரட்டுவானா? இவனாக நம்மை ஜெயிக்க முடியலே. அதுக்காகவா அந்த ராமதாசு பயலைப் பார்க்கப் போற" என்று காதில் எழும் குரல்கள் மகாலிங்கத்தின் செயலை விமர்சித்தன (Venkataraman, 2019).

மகாலிங்கத்தின் மகன் செந்தில். யூனிபார்ம் கேட்டு அடம் பிடிக்கிறான். கோபம் எல்லை கடக்கிறது மகாலிங்கத்திற்கு. அவன் மகனை அடித்துத் துன்புறுத்துகிறான். பிறகு அவன் செயலை எண்ணி வருத்தப்படுகிறான். அப்போது ஒலிக்கும் குரல்கள்,

"பெரிய ஜென்டில் மேன். ஆள் அம்பக்கா இருந்தா போதுமா? உன்னால தாண்டா வவுத்துலே இருந்த புள்ளையை அடிச்சுக் கொல்லப் பார்க்கிறான். பன்னி குட்டி போட்டது போல பெத்துத் தள்ளிட்டான். தீனி போட முடியலே" (Venkataraman, 2019).

என்ற குரல்களின் கூற்று மகாலிங்கத்தின் செயலை விமர்சிக்கின்றன. இதனால் குழப்பமான, தெளிவற்ற மனநிலை உடையவனாகிறான் மகாலிங்கம்.

"மனச்சிதைவு பொதுவாகப் புலன்களின் பேதலிப்பு, பிறழ் நம்பிக்கையாலும் மனநிலை அடிக்கடி மாறுபடும். இதோடு மட்டுமின்றி மற்றவர்களிடம் வெறுப்பும் ஏற்படும், நடத்தையில் மாறுபாடும் ஏற்படும்" என்று அமெரிக்க மனவியற் கழக கூற்றுடன் மகாலிங்கத்தின் நிலை உணரப்படுகிறது (Venkataraman, 2019).

## ஒலிகள் அழிப்பதாக கூறல்

உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் பாதிக்கப்பட்ட நபரைத் தண்டித்து விடுவதாகவும், அவரது குடும்பத்தை அழித்து விடுவதாகவும் கூறுதல் கேட்டல் தொடர்பான புலன்களின் பேதலிப்புகளின் தீவிர நிலையாகும்.

"என்னை அவமானம் செய்து விட்டு கோழை போல் ஒளிந்து கொண்டு விட்டால் என்னால் கண்டு பிடிக்க முடியாது என்று எண்ணி விட்டாயா? என்னை இழிவுபடுத்தியதற்கு உன்னைப் பழி வாங்க வந்திருக்கிறேன். உன்னைக் குடும்படுத்தோடு நாசம் செய்யப்போகிறேன்" (Venkataraman, 2019).

மகாலிங்கத்தின் செவியிலிருந்து வெளிப்படும் குரல் தன்னைக் காளி என்று சொல்லிக் கொண்டது. முந்தைய பிறவிகளில் தனது பக்தனான மகாலிங்கம் இப்போது முருக பக்தனாக மாறிவிட்டதாகவும் அதனால் அவனையும் அவன் குடும்பத்தையும் அழிப்பதாகக் கூறுகின்றது. இவை பெரும்பாலும் தனிநபர் நிலையிலோ அல்லது பிறருடன் சேர்ந்து ஒலிக்கும் நிலையிலோ அமைகின்றன. அப்போது 'பழிவாங்கக் காத்திருக்கிறேன் உன்னை குடும்பத்தோடு கொலை செய்யப் போகிறேன்'.

"உன் குடும்பத்திலே எல்லோருடைய இரத்தத்தையும் உறிஞ்சப் போகிறேன். உங்களை எல்லாம் நெருப்பில் இட்டு பொசுக்கி ஊதப் போகிறேன்" (Venkataraman, 2019).

இவ்வாறு மகாலிங்கத்தின் உள் இருந்து ஒலிக்கும் குரல்கள் அவனையும் அவன் குடும்பத்தையும் அழிப்பதாகக் கூறுகின்றன. மகாலிங்கத்தின் குடும்பத்தை வறுமை சூழ்கிறது. வறுமை காரணமாக குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் விற்கும் நிலைக்கு ஆளாகிறான் மகாலிங்கம். அப்போது ஒலிக்கும் குரல்கள்,

"மனைவி கழுத்திலே ஒரு தாலியும் மூக்குத்தியும் தானே இருக்கிறது. இரண்டையும் எடுத்துக்கப் போறேன்" (Venkataraman, 2019).

இவ்வாறு மகாலிங்கத்தின் உள்ளிருந்து ஒலிக்கும் குரல்கள் மகாலிங்கத்தையும் அவன் குடும்பத்தையும் அழித்து அவனை நிர்க்கதியாக்குவதாக கூறுகின்றது. உளவியல் முறைப்படி மனச்சிதைவு நோயில் உள்ளிருந்து ஒலிக்கும் குரல்கள் மகாலிங்கத்தையும் அவனது குடும்பத்தையும் அழிப்பதாகக் கூறுகின்றன.

## ஆபாசப் பேச்சுகளும் - சீர்குலைவும்

கேட்டல் தொடர்பான புலன்களின் முக்கியத்தன்மையானது ஒலிக்கும் குரல்களின் ஆபாசப் பேச்சுக்களாகும். காதுகள் புதினத்தில் மகாலிங்கத்தின் நிலையும் அதன் காரணமாக அவனது கவனம் சீர்குலைவதும் அமைகிறது.

"முட்டாள் மாலி! படிப்பாளி! படிப்பாளியைத் தாண்டா காதலிப்பாள் தெரிஞ்சுக்கோ. இனிமே நாகரிகமா பேசணும். நீயாருன்னு மாலிக்குத் தெரிஞ்சுடுத்து. நான் யாரு இவனுக்கு தெரியவேண்டாம்"

"கட்டாயம் தெரிஞ்சிக்கணும். அதுக்காக நீ படுக்கப் போறியா"

இவ்வாறு ஒலிக்கும் ஆபாச பேச்சுக்கள் மகாலிங்கத்தின் கவனத்தை சிதைக்கின்றன (Venkataraman, 2019).

"நீ நாதம் என்கிறே! நான் விந்து என்கிறேன். நீயும் நானும் சத்தத்திலே பொறந்து சத்தத்திலே வளர்றவங்க. விந்து எங்கே? மாலிகிட்டே நிறைய கிடைக்கும்னு ஆசை காட்டி மோசம் போயிட்டேன். விந்து பிடிக்காதுன்னா என்கிட்ட குடுத்துட்டுப் போ! நான் ஆவலோடு காத்துக்கிட்டு இருக்கேன்"

தொடரும் இந்த ஆபாசப் பேச்சுக்கள் மகாலிங்கத்தின் கவனத்தைச் சீர்குலைத்து அவனை முற்றிலும் செயலற்றவனாக்குகின்றன. இதற்கு சரியான தீர்வு ஆன்மீகம் என்பதை உணர்ந்து அதன் மூலமாக இந்நோயிலிருந்து விடுபடுகிறான் (Venkataraman, 2019).

## முடிவுரை

மனச்சிதைவினால் பாதிக்கப்பட்ட மகாலிங்கம் அடைந்த துன்பங்களும் விரக்தியும் புலன்களின் பேதலிப்புக்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. குரு அருள் மூலமான ஆன்மீக அருளும், முழுமையான இறை நம்பிக்கையும் மகாலிங்கத்தை இந்நோயிலிருந்து காப்பதாக 'காதுகள்' புதினத்தில் ஆசிரியர் விளக்குகிறார்.

## References

Carson, C., (1997) Abnormal Psychology and Modern Lite, longman publishers, UK.

Rudhran, R.K., (2015) Mana Noigal Sigichaigal Muraigal, Kavitha Pathippagam, Chennai, India.

Venkataraman, (2019) Kathugal, Kalachuvadu Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License